**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.451/2011

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | பூபதிராஜா |
| Father's Name | : | ஈஸ்வரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.02.2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் 17 வது வாதியாவேன். என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. உபயவாதிகளின் கொடி வழி வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி கொடிவழி முறையான ஆவணம் இல்லை என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்படுகிறது. மேற்படி ஆட்சேபனை வழக்கின் இறுதிவிசாரணையின்போது பரிசீலனை செய்யப்படும்)

2. 07.9.1942 வெங்கடாஜலப்பிள்ளைக்கு ராமகிருஷ்ணமுதலியார் தன் சகோதரர் சுப்பையா முதலியாருக்கு கார்டியன் நிலையில் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 20.09.1943 ல் 1,2 வாதிகளின் தகப்பனாரும், 3ம் வாதியின் மாமன் மற்றும் 4 முதல் 14 வாதிகளின் பாட்டனாருமான ஊர்க்காவலன் ரூ.75 க்கு

வாங்கிய கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 24.02.1989ல் பத்திரகாளியம்மாளுக்கு பண்டாரம் என்ற வேலு எழுதிக்கொடுத்த பாக விடுதலை ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 22.02.2005ல் தென்காசி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண்.64/2003ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 02.09.2012 அன்று இறந்த 5ம்பிரதிவாதியின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 30.06.2014 அன்று 1ம் பிரதிவாதி 6,7,10,15 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய கேவியட் மனு அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 05.06.2018 அன்று தகவல்அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் வாதியின் முன்பாத்தியஸ்தர்கள் பெயரில் பெறப்பட்ட பட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 20.05.2021 அன்று 6,7 பிரதிவாதிகளின் தந்தை பெரிய கொத்தாளத்தின் வாரிசு சான்றிதழ் இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 22.08.2025 அன்று ஆணையரால் தாக்கல்செய்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 02.09.2025 அன்று ஆணையரால் தாக்கல்செய்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி